செய்தி வெளியீடு எண்–805 நாள்–7.11.2009

# சென்னையில் மழைநீர் அகற்றும் பணிகள், மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் மற்றும் நிவாரணப்பணிகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தினார்

* * * * * * * * *

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (7.11.2009) சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சத்திய மூர்த்தி நகரை ஒட்டி செல்லும் மாம்பலம் கால்வாயினையும் அதனைத் தொடர்ந்து ஜி.என்.செட்டி சாலையில் மழைநீர் வெளியேற்றும் பணியினையும், அயோத்தியா குப்பத்தில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினையும், சூளை–அவதானய பாப்பையா சாலையில் மோட்டர் பம்புகள் மூலம் மழை நீர் அகற்றும் பணிகளையும் நேரில் பார்வையிட்டு நிவாரணப்பணிகளை துரித்தப்படுத்தினார். மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் விரைந்து செயல்பட்டு மழைநீர் தேக்கத்தை வெளியேற்ற உத்தரவிட்டார்.

இவ்வாய்வின் போது செய்தியாளர்களிடம் கூறுகையில் " சென்னையில் கடந்த 4 நாட்களாக தொடர்ந்து மழை பொழிந்து வருகின்றது. கடந்த ஆண்டு இதே காலநிலையில் 40 செ.மீட்டராக இருந்த மழை அளவு, தற்போது 30 செ.மீட்டர் அளவில் தான் உள்ளது. சென்னை மாநகராட்சி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடந்த 3 ஆண்டுகளில் 149.58 கி.மீட்டர் நீளத்திற்கு ரூ. 81 கோடியே 76 லட்சம் செலவில் புதிய மழைநீர் வடிகால்வாய்கள் கட்டியுள்ளது. அதே போன்று 996 கி.மீட்டர் தூரத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் தூர்வாரப்பட்டுள்ளன. இதனால் தென்சென்னை பகுதிகளான தியாகராய நகர், ஜி.என்.செட்டி சாலை, சாந்தோம், வேளச்சேரி, திருவான்மியூர் மற்றும் தரமணி ஆகிய பகுதிகளில் மழைநீர் தேங்குவது கடந்த ஆண்டுகளைகாட்டிலும் மிகவும் குறைந்துள்ளது. வட சென்னை பகுதியில் வியாசார்பாடி – கணேஷ்புரம், புளியந்தோப்பு, ஓட்டேரி இடங்களிலும், சுரங்கப்பாதைகளிலும், தாழ்வான பகுதிகளில் உள்ள மழைநீர் தேக்கத்தை மோட்டர்

பம்புகள் மூலம் வெளியேற்றம் பணி துரிதமாக நடைபெற்றுவருகிறது. தற்போது வரை முகாம்களில் பொது மக்கள் தங்கவைக்கும் நிலை உருவாகவில்லை. இருப்பினும் மாநகராட்சி முகாம்களில் பொது மக்கள் தங்கும் நிலை ஏற்பட்டால் அவர்களுக்கு தேவையான உணவு வழங்க தயார் நிலையில் மாநகராட்சி உள்ளது. சென்னையில் 10 மண்டலங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைக்கால நோயினை தடுப்பதற்கு சிறப்பு மழைக்கால மருத்துவ முகாம்கள் நடைபெற்றுவருகிறது".

என்று தெரிவித்தார்.

இவ்வாய்வின் போது சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி, மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்னர்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.